முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.3.2026) தினத்தந்தி நிறுவனத்தின் அதிபராகத் திகழ்ந்த, இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முன்னாள் தலைவர் சிவந்தி ஆதித்தனார் அவர்களின் துணைவியார் திருமதி மாலதி அவர்களின் மறைவையொட்டி, அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தினத்தந்தி குழுமத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன் ஆகியோர் உள்ளனர்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் – கழக துணைப் பொதுச் செயலாளர்

ஆ.இராசா எம்.பி.யின் அக்கா கணவர் - ப.அரங்கராஜன் மறைவு!

திருவுடலுக்கு ஆ.இராசா எம்.பி. – கழக முன்னணியினர் அஞ்சலி!

பெரம்பலூர், மார்ச். 14–

கழக துணைப் பொதுச்செயலாளர் – மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி. அவர்களின் அக்கா கணவர் ப.அரங்கராஜன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி. அன்னாரின் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினார்!

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., யின் உடன் பிறந்த சகோதரி கமலா அவர்களின் கணவர் ப.அரங்கராஜன் (78) உடல் நலம் பாதிக்கப்பட்டு திருச்சி அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் நேற்று முன்தினம் மாலை மறைவெய்தினார். இவருக்கு ஸ்ரீதர் எனும் மகனும்,

வித்யா எனும் மகளும் உள்ளனர்.

மறைந்த ப.அரங்கராஜன் உடல் பெரம்பலூர் எளம்பலூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. மறைந்த ப.அரங்கராஜன் உடலுக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., மலரஞ்சலி செலுத்தினார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், குடும்ப உறுப்பினர்கள் பச்சமுத்து,விஜயாம்பாள், ஆ.ராமச்சந்திரன், ஆ.கலியபெருமாள், ஆ.சிவசண்முகம், அரசு வழக்கறிஞர் பேபி(ஏ)சந்தானலெட்சுமி, மயூரிஇராசா,

மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, குன்னம் சி.இராஜேந்திரன், இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, ராமச்சந்திரன், பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர். முருகேசன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.இராஜ்குமார், செ.நல்லதம்பி,தி.மதியழகன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன்,ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர். ரவிச்சந்திரன், செல்வலெட்சுமிசேகர், ஏ.எஸ்.ஜாகிர்உசேன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காடூர்.கவியரசு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் நெ.அருண்குமார், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். நேற்று மதியம் 2.00 மணியளவில் அன்னாரது உடல் அவரது இல்லத்தில் இருந்து இறுதி ஊர்வலமாக செல்லப்பட்டு பெரம்பலூர் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

DGCA வில் காலிப்பணியிடங்களை நிரப்பாமல் தொடர்ந்து அலட்சியம்!

விமானப் பயணிகளின் பாதுகாப்புடன் விளையாடும் ஒன்றிய அரசு!

கே.இ. பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 13

இந்திய விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையமான DGCAவில் 50%க்கும் அதிகமான பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாக நாடாளுமன்ற நிலைக்குழு கடந்த ஆண்டு எச்சரிக்கை விடுத்தது.

இப்போது அந்த அறிக்கை வெளியாகி பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், DGCA காலிப்பணியிடங்களை நிரப்ப என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று, நாடாளுமன்றத்தில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதில், இந்த விவகாரம் உருவாக்கியிருக்கும் சூழல் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளதா, காலிப் பணியிடங்கள் எப்போதுக்குள் நிரப்பப்படும் என்று ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

ஆனால், விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் இருந்து கிடைத்துள்ள பதில்கள், ஒன்றிய அரசுக்கு விமானப் பயணிகளின் பாதுகாப்பில் சிறு அக்கறையும் இல்லை என்பதை தெளிவாக்கியுள்ளது.

1. காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்களை மறைக்கும் மோசடிச் செயல்:

நாடாளுமன்ற நிலைக்குழு தனது அறிக்கையில், DGCAவில் பல தளங்களில் 50%க்கும் அதிகமான காலிப்பணியிடங்கள் இருப்பதை மிகமுக்கிய மாக குறிப்பிட்டது.

இந்த நாடாளுமன்ற நிலைக்குழு என்பது வெளிப்புற அமைப்பு கிடையாது. அரசியலமைப்புப் படி, சட்டப் பூர்வமான அதிகாரத்துடன் இயங்கும் அமைப்பு. இதன் தகவலுக்கு மிக மிக நம்பகத்தன்மை உண்டு.

ஆனால், தற்போது ஒன்றிய அரசு அளித்திருக்கும் பதிலில், இந்த காலிப்பணியிடங்கள் பற்றிய உண்மையை அப்பட்டமாக மூடிமறைக்க முயற்சி

செய்துள்ளது. இதற்குப் பதிலாக, புதிதாக உருவாக்கப்பட்ட பணியிடங்களின் விவரங்களைக் குறிப்பிட்டு, இதனால் தான் இந்த எண்ணிக்கை அதிகமாக தெரிகிறது என்பது போன்ற தோற்றத்தை உருவாக்க எத்தனித்துள்ளது.

விஷயம் இப்போதுவரை மொத்தமாக எத்தனை காலிப்பணியிடங்கள் என்பதும், அவற்றை ஏன் இன்னும் நிரப்ப வில்லை என்பதுமே. ஆனால், இதற்குப் பதிலளிக்க மறுத்து மோசடிச் செயலை செய்துள்ளது ஒன்றிய அரசு.

2. ஆமை வேகத்தில் நடக்கும் பணி நியமனங்கள்:

ஒன்றிய அரசு தனது பதிலில், 36 தொழில்நுட்ப அதிகாரிகள் பணியில் சேர்ந்துவிட்டார்கள், 106 பேருக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டிருக்கிறது, 58 பேர் பரிசீலனையில் இருக்கிறார்கள் என்ற உதிரித்தகவல்களை மட்டுமே கொடுத்துள்ளது. மேலும், பற்றாக்குறையை சமாளிக்க தற்காலிகப் பணியாளர்களும் எடுக்கப்பட்டு வருகிறார்கள் என்று கூறியுள்ளது.

உதிரித்தகவல்களை வைத்து DGCAமிகப்பெரிய பணியாளர்கள் பற்றாக்குறை விகிதத்தை எப்படி சமப்படுத்திக் கொள்வது? மேலும், விமானப் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் ஒரு நிபுணத்துவ அமைப்பில், தற்காலிகப் பணியாளர்களின் நியமனத்தை எப்படி எடுத்துக் கொள்வது?

ஒன்றிய அரசின் இந்த கணக்கு, தனது மெத்தனமான நிர்வாகத்தையும் மக்களின் மீதான அக்கறையின் மையையும் மறைக்கும், வெற்று புள்ளிவிவரத் திரை மட்டுமே.

3. விமானப் பயணிகளின் பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என பச்சைப்பொய்:

தனது பதிலில் இறுதியாக, 'இந்த பணியாளர்கள் பற்றாக்குறையால் விமானப் பயணிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை' என பச்சைப் பொய் கூறியுள்ளது ஒன்றிய அரசு. நாடாளுமன்ற நிலைக்குழு முதல் விமானப் போக்குவரத்து வல்லுநர்கள் வரை இது உருவாக்கும் அபாயங்களை வலுவாக உணர்த்தியுள்ளார்கள்.

போதிய அதிகாரிகள் இல்லாததால், Airworthiness எனப்படும் விமானங்களின் தரம் பற்றிய ஆய்வுகள் மேலோட்டமாக செய்யப்படுகின்றன. இதனால், வானில் இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டு விமானம் செயலிழக்கும் அபாயம் உள்ளது. இதைக் கடந்து, அதிகப்படியான பணிச்சுமையால் நிகழும் மனிதத்தவறுகள், விமான நிறுவனங்களின் விதிமீறல் களை கண்டறிவதில் சுணக்கம் என, அபாயங்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

இப்படியொரு சூழலில், "எந்தப் பாதிப்பும் இல்லை என்று ஒன்றிய அரசு நாடாளுமன்றத்திலேயே கூறுவது, அவர்களுக்கு பொறுப்பேற்கும் தன்மை துளியும் இல்லை என்பதையே காட்டுகிறது.

DGCA என்பது விமானப்போக்குவரத்தின் ஏதோ ஒரு அமைப்பு அல்ல. அது தான் இதயம். அதிலேயே இத்தனை துளைகளை சரிசெய்யாமல் வைத்துக்கொண்டு, ஒன்றிய அரசு இவ்வளவு அலட்சியமாக இருப்பது ஏற்புடையது அல்ல. மிக விரைவாக, அதில் நிலவும் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட சிக்கல்கள் தீர்க்கப் பட்டு, விமானப்பயணிகளுக்கு பாதுகாப்பான சூழலை ஒன்றிய அரசு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி காரைக்கால் மாநில தி.மு.கழகம் சார்பில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்கள் பிறந்தநாள் விழா காரைக்கால் மாநில கழக பொருளாளர் அமுதா ஆறுமுகம் பணியேற்பு பாராட்டு விழா மற்றும் இப்தார் நோன்பு திறப்பு விழா என முப்பெரும் விழா காரைக்கால் சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாநில கழக அமைப்பாளரும் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் தலைமை தாங்கிட தலைமை செயற்குழு உறுப்பினரும் நிரவி திருபட்டிணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான நாக தியாகராஜன் முன்னிலை வகித்திட வடக்கு தொகுதி ஒருங்கிணைப்பாளர் பிரபு என்கிற பிரித்திவிராஜ் வரவேற்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தலைமை இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதை பித்தன், தலைமை கழக நாகை நாகராஜன், கழக இளம் பேச்சாளர் திருக்குவளை இரா ப்ரீத்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் மும்மதம் சார்ந்த சாதனை புரிந்த பெண்களுக்கு மகளிர் தினத்தை முன்னிட்டு பரிசு பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கலைஞரின் கனவுகளுக்கு வடிவம் தரும் முதல்வர்!

தலைவர் கலைஞர் 2013-ல் நடந்த மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் நம்மிடமிருந்து ஒதுங்கி இருந்த காங்கிரஸ், எதிரில் இருந்த புதிய தமிழகம், மனிதநேய மக்கள் கட்சி, ஆகியவற்றிடம் உதவி பெற்று கனிமொழி கருணாநிதி அவர்களை வெற்றிபெறவைத்தார்.

நம்மிடம் 23 சட்டமன்ற உறுப்பினர்களும் தே.மு.தி.க. விடம் 29 உறுப்பினர்களும் இருந்த நேரம்.

2014-ல் நடந்த மேலவைத் தேர்தலில் கலைஞர் அவர்கள் தே.மு.தி.க.விற்கு மேலவை உறுப்பினர் ஒன்றை விட்டுத் தருவதாகச் சொல்லி அனுப்பி இருந்தார். அவர்களிடம் மறு தகவல் வராமல் காலம் தாழ்த்தியதால் கலைஞர் அவர்கள் தி.மு.க. வேட்பாளராக அண்ணன் திருச்சி சிவாவை அறிவித்தார்.

அறிவிப்புக்குப் பின் லட்சிய வேங்கை திருச்சி சிவா தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றார். நானும் உடன் சென்றேன். பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றவுடன் தலைவர் சொன்னார் "சிவா! உன் திறமைக்கு, தியாகத்துக்கு, தகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இருக்கிறாய், ஆனால் தே.மு.தி.க. வந்தால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய சூழல் வரும். நீ விட்டுத் தர வேண்டும். அது எதிர்கால 2016 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குத் தோழமையாக அமையும்" என்றார்.

அதற்கு சிவா அவர்கள், "அதுக்கு என்ன அண்ணா? அவர்கள் வந்தால் மகிழும் முதல் ஆள் நான் தான். கண்டிப்பாக வாபஸ் பெறுகிறேன், நீங்கள் சொன்ன பிறகு மறு பேச்சு ஏது" என்று தியாக மனதோடு கூறினார்.

ஏதோ ஒரு சூழல் நெருக்கடி அன்று அந்த உறவு ஏற்படாமல் தடைபட்டது. அன்று தே.மு.தி.க. ஏற்று இருந்தால் தொடர்ந்து தே.மு.தி.க. ஒவ்வொரு தேர்விலும் ஒரு உறுப்பினர் உருவாகி இருப்பார்கள் அ.தி.மு.க. என்ற ஒரு கட்சி இன்று இல்லாமல், காணாமல் போயிருக்கும். தமிழ்நாடு ஆரோக்கியம் பெற்று இருக்கும். தொடர்ந்து தி.மு.க.வே ஆட்சியில் தொடர்ந்து இருக்கும்.

2014-ல் கலைஞர் அவர்கள் கண்ட கனவை, உறவை, அதே எம்.பி. சீட்டை தே.மு.தி.க.விற்கு கொடுத்து 2026 கூட்டணிக்கு அஸ்திவாரம் போட்டு கலைஞரின் கனவை நிறைவேற்றி இருக்கிறார் இன்று தளபதி.

அதேபோல் 2008-ல் தேசிய அளவில் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் தோழமை ஓரிடத்தில் நிற்காது என பிரிந்த சூழலில், கலைஞர் அவர்கள் இரு அமைப்போடும் உறவாட விரும்பினார். காங்கிரஸ் இருந்ததால் கம்யூனிஸ்ட் தோழர்கள் தி.மு.க. விடம் இருந்து பிரிந்தார்கள். கலைஞர் மனம் வருந்தியது. இரண்டையும் தி.மு.க.வின் குடையின் கீழ் கொண்டுவர கலைஞர் கனவு கண்டார். அந்த கனவை 2019 தேர்தலில் கழக தலைவர் தளபதி அவர்கள் நிறைவேற்றினார்கள்.

1978 வாக்கில் கலைஞரையும், எம்.ஜி.ஆரையும், சேர்த்து வைக்க ஓரிசாவிலிருந்த அன்றைய ஒன்றிய அரசின் காபினெட் அமைச்சர் பிஜு பட்நாயக் தலைமையில் தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் இணைப்பது என்று முடிவு செய்தனர். கட்சியின் தலைவராக கலைஞரே தொடர்வது என்றும், முதல்வராக எம்.ஜி.ஆர் தொடர்வது என்றும், கட்சிப் பெயர் தி.மு.க. என்று முடிவு செய்ததாக சொல்லப்பட்டு, பிறகு அந்த செயல் தடைபட்டது. எப்படியோ ஒன்றுபட்ட தி.மு.க.வை உருவாக்க நினைத்த எம்.ஜி.ஆர். மற்றும் கலைஞரின் கனவு அன்று தடைப்பட்டது. கலைஞர் கண்ட அந்த கனவு 2026-ல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முயற்சியில் பெரும்பகுதி நிறைவேறி இருக்கிறது.

ஆட்சியில் மூன்று முறை முதல்வராக இருந்தவர். கட்சியில் ஒருங்கிணைப்பாளராக இருந்த ஓ.பி.எஸ். முதல் முன்னாள், இந்நாள் அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்து கொண்டே இருக்கின்றனர். அ.தி.மு.க.வில் இப்போது உறுப்பினர் குறைவு.

தளபதியின் அடுத்த ஆட்சியில் 2026-2031 நிறைவுக்குள் எள் அளவு, எள்ளின் முனை அளவு, முனையின் மூக்களவு கூட அ.தி.மு.க.வில் உறுப்பினர்கள் இருக்க மாட்டார்கள்.

அ.தி.மு.க.வின் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவுப்படி தி.மு.க.விலேயே வந்து சேர்ந்து விடுவார்கள்.

2036 -லும் தி.மு.க.வே ஒன்றுபட்டு நிற்கும். வென்று காட்டி மகிழும்.

தி.மு.க.வில் கலைஞர் கண்ட கனவை, தளபதி நிறைவேற்றுகிறார். ஆனால் அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை ஜெயலலிதா கண்ட கனவு "நான் தவறு செய்து விட்டேன், தவறு செய்தமைக்கு மன்னிப்பு கேட்க தயங்க மாட்டேன், மன்னிப்பு கோருகிறேன், இனி என் காலத்துக்கு பின்னும் அ.தி.மு.க. எந்த காலத்திலும் பா.ஜ.க.வுடன் ஒட்டோ, உறவோ வைத்துக் கொள்ளாது" என்றார்.

கவிஞர்
காசிமுத்து மாணிக்கம்
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

ஆனால் எடப்பாடி, ஜெ கனவை சிதைத்து 'உறவல்ல, அடிமையாகவே மாறி' அ.தி.மு.க. வை, அடிமை அ.தி.மு.க.வாக மாற்றிவிட்டார்.

"விசுவாசத்திற்கு மறு பெயர் ஓ.பி.எஸ். தான்" என கூறிய ஜெயலலிதா, தான் முதல்வராக முடியாத சூழலில், அ.தி.மு.க. வெற்றி பெற்றால் ஓ.பி.எஸ். தான் முதல்வர் என ஒருமுறைக்கு இருமுறை அடையாளம் காட்டினார். ஜெயலலிதா இல்லாத சூழலில் பன்னீரை முதல்வராக தொடர விடாமல் செய்வது, கனவு கண்ட ஜெயலலிதா அம்மையாருக்கு அசிங்கம் இல்லையா? கனவைச் சிதைக்கலாமா?

தி.மு.க.வை வசைபாடியவர்கள் இன்று, தி.மு.க.வின் புகழுக்கு இசை பாடுகிறார்கள். தி.மு.க.வின் திசைக்கு இசைவு தருகிறார்கள்.

மிட்டாய் கண்டு ஏமாற இருந்த குழந்தைகள் கூட, வேட்டி கட்டிய அன்னை ஸ்டாலின் மடியை கெட்டியாக பிடித்துக் கொண்டனர். தளபதியின் சொற்கண்டு சுவைத்தாருக்கு கற்கண்டும் கைக்கும், கை போகாது. தி.மு.க.வை தவிர வேறு எவர் கைக்கும், கை போகாது. தி.மு.க.வை தவிர வேறு எவர் கைக்கும் என காங்கிரசார் கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஜெயலலிதாவின் கனவைச் சிதைத்து, அ.தி.மு.க.வை, தி.மு.க.வுடன் பகுதி பகுதியாக இணைக்க செயல்படுகிறார் பத்து தோல்வி பழனிசாமி.

தே.மு.தி.க., மக்கள் நீதி மையம், எஸ்.டி.பி.ஐ. என புதிய நண்பர்களைச் சேர்த்து தி.மு.க.வை பலமாக்க கலைஞர் கண்ட கனவை கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் அமைத்து தருகிறார்.

கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு ஆலோசனைக் கூட்டம் சூலூரில் உள்ள கோவை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சிபி.கே.செந்தில்குமார், சூலூர் பேரூர் கழக செயலாளர் கவுதமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுரேஷ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகரன், துணை அமைப்பாளர்கள் கே.பி.சண்முகம், மணிமோகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.